முருகப்பெருமான் துணை

**மகான் காகபுஜண்டர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.05.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. அறநெறி கொண்ட அரங்கா
அருள் நெறி தந்த குமரன்
வரமாக வந்த தேசிகா
வள்ளலே உன் பெருமை கூறி

2. கூறியே சோபகிருது விடைதிங்கள்
குறைவிலா முன்னான்கீர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 14 ம் நாள், 28.05.2023, ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகனுக்கு காகபுஜண்டர் யானும்

3. யானுரைக்க பசிபிணி இடரோடு
உயிர்கொலை துன்பம் வழி
ஞானமிலா வினை கூட்டி வாழும்
நாட்டிடுவேன் மானிட வர்க்கமே

4. வர்க்கமே வதைகண்டு வாடி
வாழ்வில் மமதை மாயை என
தர்க்கம் கொண்டு அஞ்ஞான
தணலில் விழுந்து மடிந்து பிறப்பு

5. பிறப்பைத் தொடர்ந்து வருகின்ற
பேதமையே ஏனிந்த அவலமென
பிறப்பின் பயனைத் தேடிவா
பிறவாத் தன்மை கண்டு தேறுவாய்

6. தேறவே உகந்த வழிநடத்த
தேசிகன் கலியுக காலமதை
ஆறுமுகப் பெருமானிடம் கேட்டு
அவதாரம் எடுத்து இருக்க

7. இருக்கவே தேற்றம் வேண்டுமா
இழிபிறப்பு கொள்ளா மீள வேண்டுமா
வருத்தம் கருமவினை வென்று
வாழ்விலே வசந்தம் ஞானம் பலம் வேண்டுமா

8. வேண்டுமாயின் கலிவாழ் மக்கள்
வேலவன் வடிவான அரங்கனை
கண்டு வணங்கித் தீட்சை
கலிவெல்ல அவசியம் அடைய வேண்டும்

9. வேண்டி சன்மார்க்க நெறி
வேலவனை காணும் நெறியென
உண்டான சரணாகதி கொண்டு
உறுதிபட கடைபிடிக்க வேண்டும்

10. வேண்டும் இந்தப் புவியில்
வேலவன் சக்தியான அரங்கன்
தொண்டர்களென அடையாளமதை
தெளிவுற ஏற்று வாழ்ந்துவர

11. வருகவே அறம் காக்கின்ற
வாழ்வாக மாற்றம் புரிந்துவிட
முருகப்பெருமானின் ஆசிகிட்டி
முழுமைபெற்ற மறுமை வென்ற மாமனிதர்களாவர்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–